**சென்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சென்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 378.08 மில்லியன் குறைத்தெழுதப்பட்ட பெறுமதியுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பிரித்து பெறுமதி மதிப்பிட திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இருக்க வேண்டும். |
| (ஆ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரம்பகனோயா செயற்திட்டத்தின் கீழ் ரூபா 18.02 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட குஞ்சுகளின் பெறுமதியானது உயிரியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 ஆம் பந்திக்கு முரணாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் நிதியாண்டில் அனைத்து உயிரியல் சொத்துக்களும் இலங்கை கணக்கீட்டு நியம இல. 41 இன் பிரகாரம் நியாயமான பெறுமதியில் வெளிப்படுத்தப்படும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இருக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தளங்களின் உப அலகுகள் மற்றும் பிரதான தளங்களுக்கு இடையே ஏற்பட்ட ரூபா 159.9 மில்லியன் கூட்டுமொத்த உள்நாட்டு கொடுக்கல்வாங்கல்கள் நீக்கப்படாமலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. மேலும், தள அலுவலகங்களுக்கு இடையிலான உள்ளக கொடுக்கல்வாங்கல்களின் மூலம் ஈட்டப்பட்ட ரூபா 56.78 மில்லியன் தொகையானது கம்பனியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட கால அவகாசம் இருந்தமை காரணமாக சில உருப்படிகளை அகற்றுவது சாத்தியமில்லை. ஐந்தொகை தொடர்பான மீதிகள் இந்த ஆண்டில் விசாரிக்கப்பட்டு அதற்கேற்ப நீக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தள அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீதிகள் நீக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா மில்லியன் | வேறுபாடு ரூபா மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வியாபார கடன்பட்டோர் | 1,286.66 | 1,299.37 | 12.71 | இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில் விலைப்பட்டியல்களைச் சரியாக ஒப்பிடாதது போன்ற காரணங்கள் இதற்குப் பங்களித்துள்ளன. | தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய மற்றும் அவர்களிற்கு செலுத்த வேண்டிய மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் | 2,027.33 | 2,080.10 | 52.77 | | |
| நானாவித கடன்பட்டோர் | 13. 30 | - | 13.30 | | |
| வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் | 3,449.91 | 3,466.37 | 16.45 | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 2,397 மில்லியனாக இருந்தது, இதில் ரூபா 401.63 மில்லியன் மற்றும் ரூபா 67.08 மில்லியன் முறையே 03 முதல் 05 ஆண்டுகள் வரையும், 05 ஆண்டுகளுக்கு மேலாகவும் நிலுவையாக இருந்தன. | இது தொடர்பாக தலைமை அலுவலகம் மற்றும் உரிய தள அலுவலகங்களில் இருந்து தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிலுவையாக உள்ள மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் (Retention Receivable) ரூபா 2,962.35 மில்லியன் ஆக இருந்தது. அதில் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களுக்கான நிறுத்திவைத்தல் பணம் ரூபா 659.28 மில்லியன் ஆக இருந்தது. அதில் ரூபா 127.78 மில்லியன் மற்றும் ரூபா 158.02 மில்லியன் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளால் உரிய அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாததால். முறையே 3 முதல் 5 ஆண்டுகள் வரையும், 5 ஆண்டுகளுக்கு மேலாகவும் நிலுவையாக உள்ளன. | இது தொடர்பாக தலைமை அலுவலகம் மற்றும் உரிய தள அலுவலகங்களில் இருந்து தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிலுவையாக உள்ள நிறுத்திவைத்தல் பண மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் பணம் (Retention Payable) என்பன முறையே ரூபா 1,651.30 மில்லியன் மற்றும் ரூபா 766.08 மில்லியனாக காணப்பட்டது. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 748.33 மில்லியன் தொகையான கடன்கொடுத்தோர் மீதி 02 முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக தீர்க்கப்படாமல் இருந்தது. | வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய நிறுத்திவைத்தல் பண தொகைகளை பெற்ற பின்னர் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பண கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | நிலுவை மீதிகள் உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

### 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,545.96 மில்லியன் தொகையை தாய் கம்பனியான மத்திய பொறியியில் உசாத்துணை பணியத்திற்கு (CECB) செலுத்த வேண்டியிருந்தது, மேலும் கம்பனி தொடங்கப்பட்டதில் இருந்து இந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட உடன்படிக்கைகளை கம்பனி பேணியிருக்காததுடன் இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு எந்த ஒரு பயனுள்ள நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. எனவே, இந்த மீதி 2017 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. | தாய் கம்பனிக்கு செலுத்த வேண்டிய நீண்ட கால மீதிகள், அந்த மீதிகளை மூலதனமாக்குவதற்கான முறையை இனங்காண்பதற்கு மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. | கம்பனிக்கும் பணியகத்திற்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்களுக்கு தெளிவான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட வேண்டும். மேலும் உரிய நிலுவை மீதிகளை வெளிப்படுத்தி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கான நல்லாளுகைக்கான செயற்பாட்டு கையேடு தொடர்பான 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| 3.2 (i) ஆம் பந்தி | பதவியணியினருக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை 2024 மார்ச் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கு விரைவாக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 383.3 மில்லியன் நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 58.4 மில்லியன் ஆக இருந்தது. எனவே நிதி விளைவுகளில் ரூபா 324.9 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய கணக்கீட்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 522 மில்லியனால் அதிகரித்த போதிலும் விற்பனை மற்றும் நிர்வாக செலவினங்கள் ரூபா 798 மில்லியனால் அதிகரித்தமை பிரதானமாக இவ்வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின உருப்படிகளின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விபரம் | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | (%) |
| <u>வருமானம்</u> | | | | |
| நிர்மாண வருமானம் | 6,854.08 | 6,332.58 | 521.5 | 8 |
| ஏனைய வருமானம் | 78.39 | 154.89 | (76.5) | (49) |
| நிதி வருமானம் | 701.36 | 320.92 | 380.44 | 119 |
| <u>செலவினங்கள்</u> | | | | |
| விற்பனை கிரயம் | 6,383.50 | 5,695.76 | 687.74 | 12 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள் | 14.96 | 43.43 | (28.47) | (65.5) |
| நிதி செலவினங்கள் | 15.36 | 7.98 | 7.38 | 92 |
| நிர்வாக செலவினங்கள் | 917.31 | 806.68 | 110.63 | 14 |

மூலோபாய ரீதியாக விற்பனை கிரயம் மற்றும் நிர்வாக செலவினங்களை குறைப்பதிலும் வருமானத்தின் முக்கிய வளமூலமாக உள்ள நிர்மாண வருமானத்தை அதிகரிப்பதற்கு திட்டமிடுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2023 | 2022 |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்தலாப விகிதம் (GP) (%) | 6.87 | 10.05 |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | -5.6 | -0.92 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) (%) | 2.13 | 1.87 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | |
| நடைமுறை சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1: 1.2 | 1:1.2 |
| விரைவு சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1:1.1 | 1:1.1 |

மீளாய்வாண்டில், மொத்தலாப எல்லை 6.8 சதவீதமாக இருந்தது, இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், கம்பனி அதன் ரூபா 14,214 மில்லியன் மொத்த சொத்து அடிப்படையை பயன்படுத்தி மீளாய்வாண்டில் ரூபா 302 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை ஈட்டியுள்ளது. எனவே, மொத்த சொத்துக்கள் மீதான சராசரி திரும்பல் விகிதம் 2.13 சதவீதம் மாத்திரமே ஆகும். வரவிருக்கும் காலத்தில் உகந்த மொத்தலாப விகிதத்தை பேணுகின்ற அதே நேரம் செயற்பாட்டு இலாபத்தை அதிகரிப்பதற்கு வளங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்த மூலோபாய திட்டமொன்றை தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் செயற்பட வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக ரூபா 105.75 மில்லியன் தொகை 62 செயற்திட்டங்கள் தொடர்பான தாமத சேதங்களாக (Liquidated Damages) தொழில்தருநர்களால் விலைப்பட்டியல்களில் இருந்து கழிக்கப்பட்டிருந்தது. 09 செயற்திட்டங்களுக்காக இவ்வாறு கழிக்கப்பட்ட ரூபா 36.81 மில்லியன் தொகையை அறவிட முடிந்த போதிலும் 18 செயற்திட்டங்களுக்கு விண்ணப்பித்த கால அவகாசத்தை 2023 திசெம்பர் 31 வரை நீடிப்பதற்கான அங்கீகாரங்கள் பெறப்படாததுடன் 35 செயற்திட்டங்கள் தொடர்பாக கழிக்கப்பட்ட ரூபா 49.01 மில்லியன் தொகையான தாமத சேதங்கள் அறவிடப்பட முடியாதிருந்தன. | காலதாமதமான இழப்பீட்டு பணம் அறவிடப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கு கால நீடிப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பணத்தை விடுவிப்பதற்கு தொழில்தருநர்களுடன் இணைந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கிடைக்கும் அனைத்து பணத்தையும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தாமத சேதங்களை தவிர்ப்பதற்கு சரியான செயற்திட்ட கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 இடங்களில் இயங்கி வந்த 05 அஸ்பால்ற்/கிறஷர் இயந்திரங்களில், 2023 ஆம் ஆண்டில் 02 இயந்திரங்கள் இயங்கியதன் காரணமாக கம்பனி ரூபா 18.96 மில்லியன் நட்டத்தைச் சந்தித்துள்ளதுடன், ஏனைய 03 இயந்திரங்கள் விளைவற்ற நிலையில் இருந்தன. | இந்த இயந்திரங்கள் CECB இற்கு சொந்தமானவை என்பதால், அவற்றின் கிரயம் CECB இன் கணக்குகளில் உள்ளது. விளைவற்று இருந்த போதிலும் பராமரிப்புச் செலவுகளே இந்த நட்டத்திற்கு முதன்மைக் காரணமாகும். நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் இந்த நட்டத்துக்கு பங்களித்திருந்தது. | அஸ்பால்ற்/கிறஷர் இயந்திரங்களை இலாபகரமாக இயக்குவதில் கம்பனியின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 60 பேர்ச்சஸ் காணியை 30 வருட குத்தகை அடிப்படையில் சுவீகரிப்பதற்காக முறையான உடன்படிக்கையில் ஈடுபடாமல் ரூபா 15.43 மில்லியன் தொகையை ஒரே | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இந்த குத்தகைப் பத்திரத்தை பூர்த்தி செய்வதற்கு, இந்த காணி உட்பட 348 ஏக்கர் காணிகளுக்கு அரசாங்க காணி கட்டளைச்சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் விலக்கு ஆவணங்களை நகர அபிவிருத்தி | கம்பனி முழு வாடகையையும் செலுத்தியிருந்ததால் உரிய உடன்படிக்கை நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் விரைவில் கைச்சாத்திடப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தடவையில் கம்பனி செலுத்தியுள்ளதுடன் இந்த காணியில் சப்ரகமுவ தள அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. | அதிகாரசபை பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த பின்னர் இந்த வாடகைப் பத்திரத்தை பூர்த்தி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சப்ரகமுவ தள அலுவலகம் மற்றும் களஞ்சியசாலையானது முன்னர் வாடகை அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் காணியில் இயங்கி வந்ததன் மூலம் ரூபா 3.8 மில்லியன் வாடகைச் செலவினம் தவிர்க்கப்பட்டது. | வேண்டும். |
| (இ) | ரம்பகனோயா செயற்திட்டம் முதன்முதலில் CECB ஆல் மேற்கொள்ளப்பட்டு, மீளாய்வாண்டில் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியளவில் கையளிப்புச் செயன்முறை உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால், காணியில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகள் உட்பட சொத்துக்களின் பெறுமதி CECB இன் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளது. | இந்த விவசாய செயற்திட்டம் முதலில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டது, மேலும் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 17.28 மில்லியன் கிரயம் ஏற்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் இந்தத் தொகையை CESL இல் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். | செயற்திட்ட கையளிப்பு செயன்முறை சரியாக பூர்த்திசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,558.05 மில்லியன் கிரயமான சொத்துக்கள் வருடாந்த மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு சரியாகக் குறியீடு இடப்படவில்லை. மேலும் அந்தக் குறியீடுகள் ERP கணனி முறைமையில் இருக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நாட்களில் நிலையான சொத்துக்களில் உள்ள வேறுபாடுகளை சீர்செய்யும் பணி நடைபெற்று வருகிறது, அது பூர்த்தியடைந்தவுடன் நிலையான சொத்துகளின் குறியீடிடல் முறைமைப்படுத்தப்படும். | அந்த சொத்துக்கள் சரியாக குறியீடு இடப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனி அதன் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களில் இருந்து 2023, 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 942.90 மில்லியன், ரூபா 667.42 மில்லியன் மற்றும் ரூபா 888.15 மில்லியன் செயற்பாட்டு நட்டங்களை சந்தித்துள்ளதுடன் மீளாய்வாண்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 40 நிர்மாண செயற்திட்டங்களில் இருந்து | மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சிய மூலப்பொருள் கிரயம், அதிக மேந்தலை கிரயம், EOT அங்கீகாரங்களைப் பெறுவதில் தாமதம், தொற்றுநோய் நிலைமை, கொடுப்பனவு தாமதம் போன்றவற்றின் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு அதிக காலம் எடுத்தது. | ஒப்பந்த கிரயம் மற்றும் காலத்தை முகாமை செய்வதற்கும் நிர்மாண செயற்திட்டங்களால் ஏற்படும் நட்டங்களைத் தடுப்பதற்கும் முகாமைத்துவம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிக்கு ரூபா 528.57 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த நட்டங்கள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை நேரடியாகப் பாதிக்கிற போதிலும் இந்த நட்டங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பான நபர்கள் மற்றும் காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய பெரும் நட்டங்களைக் குறைப்பதற்கு முகாமைத்துவம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டில் கம்பனி ரூபா 383.30 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை சந்தித்துள்ளதுடன் நிலையான வைப்புக்கள் மூலம் ரூபா 701.36 மில்லியன் வருமானத்தை ஈட்டியதன் விளைவாக நிதிக்கூற்றில் வரிக்கு முன்னரான இலாபம் காட்டப்பட்டிருந்தது. | நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, செயற்பாடுகள் நட்டத்தை சந்தித்துள்ளன. | நிர்மாண செயற்திட்டங்களால் ஏற்படும் செயற்பாட்டு நட்டங்களை இலாபங்களிற்கு மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மத்திய தள அலுவலகம், கம்பஹா தள அலுவலகம், அனுராதபுரம் தள அலுவலகம் மற்றும் இயந்திரவியல் பிரிவு ஆகியவற்றால் முறையே ரூபா 198.02 மில்லியன், ரூபா 31.66 மில்லியன், ரூபா 151.60 மில்லியன் மற்றும் ரூபா 33.67 மில்லியன் நட்டங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான கம்பனி ரூபா 383.30 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை சந்தித்திருந்தது. | பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்றுநோயால் நிர்மாணத் துறையில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக, எமது கம்பனியின் பல தள அலுவலகங்களின் செயற்திட்டங்களை நட்ட மட்டத்தில் பேண வேண்டியிருந்தது. | கம்பனியின் ஒவ்வொரு பிரிவிலும் செயற்பாட்டு நட்டத்தைக் குறைப்பதற்காக அதன் நிர்மாண நடவடிக்கைகளுக்கு நிதி, மனித மற்றும் ஏனைய பௌதீக வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதில் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 875.39 மில்லியன் மற்றும் ரூபா 4,188.91 மில்லியன் மீதிகள் முறையே வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவையாகவும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவையாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. எனினும், கம்பனி செயற்திட்டத்தை பூர்த்தி செய்த பின்னர் அத்தகைய மீதி எதுவும் இருக்கக்கூடாது. மேலும் முறையாக சரியான நேரத்தில் விலைப்பட்டியல்கள் | இறுதி விலைப்பட்டியல் சான்றுபடுத்தலில் தாமதம் ஏற்படுவதால், இந்த மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு காலம் எடுக்கும். இறுதி விலைப்பட்டியல்கள் உறுதிப்படுத்தப்படாமல் இருப்பதால், ஒப்பந்தத் தொகையை திருத்த முடியாது, எனவே இந்த பெறுமதிகளின் தீர்ப்பனவிற்கு காலம் எடுக்கிறது. | தாமதமின்றி இறுதி விலைப்பட்டியலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்படாததால், 16 பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்கு ரூபா 69.24 மில்லியன் மற்றும் ரூபா 15.58 மில்லியன் தொகைகள் முறையே வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவையாகவும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவையாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. | | |
| (ஆ) அனைத்து பெறுமதி சேர் வரி (VAT) கொடுப்பனவுகளும் கம்பனியின் தலைமை அலுவலகத்தால் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அந்த வற் கொடுப்பனவுகளை கணக்கீடு செய்வதற்கு அட்டுறு எண்ணக்கரு பயன்படுத்தப்படுகிறது. 2023 திசெம்பர் மாதத்திற்கான தள அலுவலகங்கள் சமர்ப்பித்த ஆவணத்திலும் இறுதி நிதிக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய வற் ஆகியவற்றுக்கு இடையே ரூபா 16.16 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த முரண்பாட்டை இணக்கம் செய்வதற்கு கம்பனி மாதாந்த கணக்கிணக்க செயன்முறையை பேணியிருக்கவில்லை. | காசு அடிப்படையில் வற்றை செலுத்துவதற்கு CESL பதிவு செய்யப்பட்டுள்ளதால், வற் கொடுப்பனவுகள் அதற்கிணங்க செய்யப்படுகின்றன. அந்த நோக்கத்திற்காக, ERP முறைமை காசுப்புத்தகத்தின் அடிப்படையில் தனித்தனி உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான இரண்டு அறிக்கைகளைத் தயாரிக்கிறது. அதன் பிரகாரம், செலுத்த வேண்டிய வரியின் சரியான தொகை காசு அடிப்படையில் கணிப்பிடப்படும். உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் மிகவும் சரியாக செய்யப்படுவதை இந்த முறைமை உறுதிப்படுத்துகிறது. | இந்த மாற்றத்திற்குக் காரணமான உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு விலைப்பட்டியல்களை தனி ERP முறைமை மூலம் மாதாந்தம் கண்டறிந்து கணக்கிணக்கம் செய்யும் வகையில் முறைமை உருவாக்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குச் சொந்தமில்லாத பதவிகளுக்கு 09 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளது. மேலும் CESL இல் பணிக்கமர்த்தப்பட்ட 129 CECB பதவியணி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் CECB இலிருந்து பணிக்கமர்த்தப்பட்ட 140 CESL பதவியணியினர் எண்ணிக்கைக்கும் இடையே வேறுபாடு இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிக்கு இணைக்கப்பட்ட எண்ணிக்கை 118 என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சில அதிகாரிகள் CECB இல் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தமை பின்னர்தான் எங்களுக்கு சரியாகத் தெரிவிக்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்படாத பதவிகளுக்கு 09 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறை மற்றும் புதிய பதவிகள் அங்கீகாரத்திற்காக MSD இற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. | பதவியணியினர் அங்கீகாரத்தை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் அங்கீகரிக்கப்படாத பதவிநிலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படக்கூடாது. |